www.tamilarangam.net


# ஈழச்செய்தி

★EPIC

**EELAM NEWS**


(ESTD IN 1980) POST BAG 5551, MADRAS-94. INDIA.

கடிதம் 30 | EPIC வெளியீடு | ஜூலை 1985


## "தூக்கிய துப்பாக்கிகளின் வேலை முடியவில்லை ஆயுதங்கள் அனைத்தும் ஆயத்தமாகவே உள்ளன"



- ★ தோழர் க. பத்மநாபா ஈழமக்களுக்கு விடுத்துள்ள செய்தி
- ★ சிறிலங்கா நவபாசிஸ்டுக்களுக்கு ஈழத் தேசிய விடுதலை முன்னணி எச்சரிக்கை
- ★ இலங்கைத் தீவில் பதட்டத்தை பேண சர்வ தேச பிற்போக்கு கும்பல் தீவிரம்
- ★ திம்பு பேச்சுவார்த்தை (விபரங்கள் உள்ளே)



போரிடும் ஈழத்தை ஆதரிப்போம் என்று எட்டுத்திக்கும் கொட்டுமுரசே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசிரியர் குறிப்புகள்

# ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் தீர்க்க தரிசனமிக்க முடிவு!

சிறீலங்கா ஆக்கிரமிப்பாளரிடமிருந்து ஈழத்தை மீட்டெடுக்க, காட்டுமிராண்டித்தனமான அடக்கு முறைகளும், நித்திய படுகொலைகளும், வேதனைக் குரலும், விம்மற் பெருமூச்சும் அன்றாட நியதியாகிவிட்ட ஈழத்து மண்ணில் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் நிலைநாட்ட ஈழத்தின் புரட்சிகரப் போராளிகள் ஆயுதம் தாங்கியுள்ளனர்.

ஆயுதம் தாங்கிப் போரிடும் நான்கு பிரதான விடுதலை அமைப்புகள் ஐக்கியப்பட்டு **பொது எதிரிக்கெதிராக அனைத்து ஆயுதங்களையும்** உயர்த்திய போது ஈழத்தின் போராட்ட வரலாறு புதியதோர் கட்டத்திற்குள் பிரவேசித்தது, இன்னல் படும் ஈழமக்களும் வேதனையை மறந்து உவகை கொண்டனர். ஆயுதப் போராட்டத்தின் வெகுஜன அடித்தளம் பரவலாகியது, இதனால் ஈழத்தின் எதிரிகள் நிலைகுலைந்தனர்.

ஆயுதப்படைகளின் மிலேசத்தனமான ஒடுக்கு முறைகளை ஏவி ஈழப் போராட்டத்தின் குரல் வளையை நெரித்துவிட நவபாசிச அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளெல்லாம் தோல்விகளையே சொந்தமாக்கி வந்தன.

**ஈழத் தேசிய விடுதலை முன்னணியில்** உள்ள நான்கு விடுதலை அமைப்புக்களும் தனித் தனியே எதிரிக்கெதிராக தொடுத்த இராணுவ நடவடிக்கைகள் எதிரிப்படைகளிடையே சீர்குலைவை ஏற்படுத்தியது. என்னதான் சலுகைகள் வழங்கப் பட்டும், கொலை செய்யவும், கற்பழிக்கவும் தங்கு தடையற்ற உரிமை வழங்கியும் கூட கூலிப்படைகள் சொல்லாமல் கொள்ளாமல் படையைவிட்டு ஓடி ஒளிந்து கொண்டன.

இந்த நிலையில் இந்திய அரசின் ஆக்க பூர்வமான நல்லெண்ண முயற்சிகளால் இலங்கைத் தீவில் தற்காலிக யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து ''தற்காலிக யுத்த நிறுத்தத்திற்கு'' இணங்கிய ஈழப் போராளிகள் தமது இராணுவ நடவடிக்கைகளை சற்று நிறுத்திவைத்துள்ளனர்.

ஆனால் சிறீலங்கா அரசு பொருளாதார இராணுவரீதியில் தனக்கு ஏற்பட்டுள்ள சீர்குலைவை போக்கி தன்னைப் பலப்படுத்தும் உள் நோக்கத்துடன் தற்காலிக யுத்த நிறுத்தத்தை பயன்படுத்த முனைந்துள்ளது.

ஈழப் போராளிகள் தற்காலிக யுத்த நிறுத்த காலகட்டத்தில் எதிரிபபடைகள் மீது எவ்விதமான தாக்குதலையும் தொடுக்கவில்லை. ஆனால் சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகள் பல பகுதிகளில் யுத்தநிறுத்தத்தை மீறியுள்ளன.

தற்காலிக யுத்தநிறுத்த காலகட்டத்தில் சிறீலங்கா அரசு தான் ஒப்புக்கொண்ட **ஈழத் தேசிய விடுதலை முன்னணியின்** நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் உண்மையாக நடந்து கொள்ள வில்லை.

சிறீலங்கா அரசுடன் கடந்த காலங்களில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கு நேர்ந்த கதியும் இதனால் பெற்ற அனுபவங்களும், தற்போது தற்காலிக யுத்த நிறுத்தத்தை சிறீலங்கா அரசு மீறுவதும் ஈழமக்களை கொதிப்படைய வைத்துள்ளது. ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் ஆயிரமாயிரம் மக்கள் யுத்த நிறுத்த மீறல்களை கண்டித்தும், ஈழமே ஒரே தீர்வு என்பதை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்ட பேரணிகள் நடத்தி உள்ளனர்.

ஈழமக்களின் பெரும்பான்மையோரின் பிரதி நிதித்துவ அமைப்பாக உள்ள ஈழத்தேசிய விடுதலை முன்னணி ஈழமக்களிடையே இன்றுள்ள நிலையையும், அவர்களின் தேவைகள், விருப்பங்கள் என்பவற்றையும் கவனத்தில் கொண்டு தனது அரசியல் கடமையை சரியாக நிறைவேற்றி வருகிறது. சிறீலங்கா அரசுடன் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி அம்பலப்படுத்தியதுடன் சிறீலங்கா அரசு முன்வைத்த போலித்தனமான தீர்வையும் ஈழத் தேசிய விடுதலை முன்னணி முற்றாக நிராகரித்துள்ளது. இந்தப் பேச்சுவார்த்தையை தந்திரோபாயமாக பயன்படுத்துவது என்பதிலும், சிறீலங்கா அரசு உண்மையான அரசியல் தீர்வை முன்வைக்கப் போவதில்லை என்பதிலும், ஈழத் தேசிய விடுதலை முன்னணிக்குள் மாறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது.

ஆனால் தீர்க்கதரிசனமிக்க அரசியல் முடிவை எடுத்து செயல்படுள்ளது மூலம் ஈழப் போராளியாள் சமாதானத்தின் எதிரிகள் அல்ல. பேச்சு வார்த்தை மூலம் சமுகமான தீர்வு ஏற்படுவதற்கு தடையாக இருப்பது ஈழப் போராளிகள் அல்ல **ஈழத் தேசிய விடுதலை முன்னணி** வெளிச்சமிட்டுக் காட்டு, **ஈழமக்களிற்கு தனது தலைமையை சரிவர வழங்கியுள்ளதுடன்** சர்வதேச அரங்கில் சகதியாவும் உருவாகியுள்ளது.

**போராட்டம் தொடரும், ஈழம் மலரும்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஊர்க் காவல் படையின் மனித வேட்டைகள்...

# எதிரிப்படைகளின் போர்நிறுத்த மீறல்கள்...

ஈழத்தின் எல்லைப்புறங்களில் சிங்களக் காடையர்களுக்கு தொண்டர் படை என்னும் பெயரில் சிறீலங்கா அரசு ஆயுதப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கிவருகிறது; ஈழக்கிராமங்களில் புகுந்து கொள்ளையிடும் இக்குண்டர் கூட்டத்துக்கு ஊர்க் காவல்படை'' என்று பெயரிடப் பட்டிருக்கிறது.

ஜூலை 11ஆம் திகதி ஈழத்தின் எல்லைப்புறமான வன்னி மண்ணில் ஊர்க்காவல்படை குண்டர் கூட்டம் தனது அட்டூழியங்களை மேற்கொண்டுள்ளது. ஒதியமலை, பெரியகுளம் போன்ற கிராமங்களுக்குள் ஆயுதங்கள் சகிதம் புகுந்த இக் கூட்டம் தமிழ்மக்களின் உடைமைகளை கொள்ளையிட்டுள்ளது. இக் குண்டர் கூட்டம் டொலர், கென் பண்ணைகளிலுள்ள சிறீலங்கா இராணுவக் கூலிகளால் ஆயுதப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறார்கள். தமது உடைமைகள் கொள்ளையிடப் பட்டதாலும், வாழ்விடங்கள் தீக்கிரையாக்கப் பட்டதாலும் பெரியகுளத்தில் இருந்து பல தமிழர்கள் வெளியேறிய வண்ணம் உள்ளனர்.

தமது வயல்களில் அறுவடை செய்து கொண்டிருந்த தமிழ் விவசாயிகள் மூதூரில் ''ஊர்க்காவல்'' படையால் சுடப்பட்டுள்ளனர்.

ஜூலை 12 ஆம் திகதி மட்டகளப்பு மண்ணில் களுவாஞ்சிக்குடி என்னும் இடத்தில் பேருந்து வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த தமிழ் வாலிபர்கள் சிறீலங்கா இராணுவக் கூலிகளால் மிருகத்தனமாக தாக்கப்பட்டு வதைமுகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

ஜூலை 11 ஆம் திகதி முதல் வன்னிமண்ணிலுள்ள பாவற்குளம் என்னும் பகுதியில் சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகள் ஈழமக்களின் வாழ்விடங்களை சிதைக்கும், வயாபார நிலையங்களில் புகுந்து கொள்ளையிடும் நடவடிக்கைகள் அதிகமாகியுள்ளன. இதனால் பாவற்குளத்தில் தமிழர்கள் வாழமுடியாத நிலை உருவாகிவருகிறது. பாவற்குளத்தில் முற்றுகையிட்டுள்ள சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகள் வீடொன்றுககுள் புகுந்து இளம் பெண்ணை கற்பழித்தன.

மட்டுநகரில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களை எதிரிப் படைகள் சுற்றிவளைத்தன. யுத்த நிறுத்தத்தை மீறி ஆயுதங்களை பயன்படுத்தாத நிலையில் அவர்கள் எதிரிப்படைகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் ஒரு போராளி சயனைட் அருந்தி உயிரை மாய்த்துக் கொண்டார்.

யுத்த நிறுத்த மீறல்கள் சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்கள் தரப்பில் அதிகரித்து வருவது பற்றி ஈழத் தேசிய விடுதலை முன்னணி ஆலோசித்து வருகிறது.

### ஈழப் போராளிகளை இந்தியா எச்சரித்ததா?
### சிறீலங்கா செய்தி நிறுவனம் சிண்டுமுடிகிறது.

ஈழப் போராளிகளை இந்தியா எச்சரித்துள்ளதாகவும், இந்தியாவை விட்டு வெளியேற வேண்டி ஏற்படும் என்று இந்திய அரசு கூறியிருப்பதாகவும் சிறீலங்கா செய்தி நிறுவனமான ''லங்காபுவத்', உண்மைக்கு புறம்பான செய்தியை வெளியிட்டது. ஈழப்போராளிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையே சிண்டுமுடியும் விதமான சின்னத்தனமான காரியங்களில் சிறீலங்கா செய்தி நிறுவனங்கள் இப்போது ஈடுபட்டு வருகின்றன.

''லங்காபுவத்'' செய்தியை இந்திய அரசு வன்மையாக மறுத்துள்ளது. சிறிலங்காவில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் இந்த மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஈழப் போராளிகள் எச்சரிக்கப்பட்டார்கள் என்ற செய்தி தவறானது, இலங்கையின் இனப்பிரச்சனையில் நல்லதோர் சூழ்நிலை ஏற்படும் நிலையை இச்செய்தி குழப்புவதாக உள்ளது. அதே வேளையில் ஈழப் போராளிகளை எச்சரிக்கும் நிலையில் இந்தியஅரசு இல்லை, அப்படி அவர்களை எச்சரிககவும் முடியாது என்று இநதிய தூதரக அதிகாரி லட்சுமிபூரி கூறியிருக்கிறார்.

www.tamilarangam.net

# யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்கின்றன

# ஆக்கிரமிப்பு படைகளின் ஆதிக்கத்தனம்

ஜூலை 4, ஜூன் 18 முதல் நடைமுறையிலிருக்கும் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு மதிப்பளித்து விடுதலைப் போராளிகள் அரசபடைகளுக்கு எதிராக எவ்வித தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது அரசியல் நேர்மையுடன் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிறீலங்கா அரசானது, போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கான நிபந்தனைகள் எல்லாவற்றையும் மீறித் தனது அரசபடைக் குண்டர்களின் மூலம் தமிழ் மக்கள் மீதான வெறித் தாக்குதல்களைத் தொடர்ந்தும் நிகழ்த்தியிருக்கிறது.

மன்னாரில் ராணுவத்தினர் வெறிகொண்டு தமிழ் மக்களைத் தாக்கியதில் 3 பேர் பலியானார்கள். நவஜ்சாதி ராணி, சதாசிவம், சிவகுமார் ஆகியோரே வெறியர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியான அப்பாவித் தமிழர்களாவர். சாந்தமலை அம்பலாந்துறை ஆகிய இடங்களில் தமிழர் வீடுகளுக்குள் புகுந்த ஆக்கிரமிப்பு படைகள் சோதனை என்ற பெயரில் கொடூர தாக்குதல்களை நிகழ்த்தினார்கள். வமாரை என்ற இடத்தில் ராணுவக் கூலிகள் வெறிபிடித்துச் சுட்டதில் மக்கள் பயந்தோடினர்; ஒருவர் காயமடைந்துள்ளார். கரடியனாறு பகுதியில் தமிழ்மக்களது வீடுகளை எல்லாம் தீவைத்துக் கொளுத்தியுள்ளார்கள்.

## திட்டமிட்ட குடியேற்றங்கள் பௌத்த பிக்குவின் கூச்சல்!

ஜூன் 30 இலங்கை முழுவதையும் (சிறீலங்கா +ஈழம்) ஒரே சிங்களபௌத்த நாடாக்கிவிட வேண்டுமென்று வெறியுடனிருப்பவர்கள் சிறீலங்காவின் புத்த பிக்குகள். இதற்காக தமிழர்களை ஒடுக்கிவிடுவதற்கான திட்டங்களை அவ்வப்போது சில சிங்கள அமைச்சர்களுக்கு வழங்கி வருபவர்கள் இந்தக் காவியுடைதரித்த இன-மத வெறியர்களே!

வடக்கிலும் கிழக்கிலும் சிங்களவரைத் தொகுதிக்கு 700 குடும்பங்கள் என்ற எண்ணிக்கையின்படி குடியேற்ற வேண்டும். இதற்காக சிறீலங்கா அரசு இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தி அவரது சம்மதத்தைப் பெற வேண்டும்!'' இவ்வாறு சிறீலங்காவின் பிரதமர் பிரேமதாசவின் முன்னிலையில் தன் இனவெறியைக் கக்கி உள்ளான் வண அமரபுரிபீட இந்துவே உத்தானந்த மகாநாயக்கதேரோ.

கிராமவிழிப்பு 85 கண்காட்சி திறப்புவிழாவில் நடைபெற்ற இந்த சதிப்பேச்சுக்களில் மற்றும் பல சிங்கள அமைச்சர்களும் பிக்குகளும் கலந்து கொண்டனர்.

## சிங்களவர்களுக்காக நான் குரல் கொடுக்கக் கூடாதா?

## சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் வேடம் கலைகிறது

ஜூன் 30—

நான் சிங்களவன்! சிங்களவருக்காக ஏன் குரல் எழுப்பக்கூடாது? என ஆவேசமாய்ப் பேசியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவரான அநுராபண்டாரநாயக்கா. ''முஸ்லீம்களுக்கு டாக்டர் கலீலும், டாக்டர் பதியுதீன் மகமூத்தும், தமிழர்களுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் குரல் கொடுக்க முடியுமென்றால் சிங்களவர்களுக்காக நான் ஏன் குரல் கொடுக்கக்கூடாது, நானும் சிங்களவன்தானே, எனக்கு இனஉணர்ச்சி இருக்க கூடாதா?'' இவ்வாறு வீரகர்ஜனை புரிந்திருக்கிறார் முன்னாள் பிரதமர் சிறீமாவோ அம்மையாரின் செல்வப் புதல்வரும் இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அநுரா பண்டாரநாயக்கா. சிறீலங்கா சுதந்திரக்கடசி அரசாங்கப் பதவியில் இருந்தால் தமிழர் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று விதண்டாவாதம் புரியும் விற்பன்னர்கள் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர் பிரச்சனை தொடர்பான ஒரே விதமான அணுகுமுறையைத்தான் கடைப்பிடிக்கிறார்கள் என்பதை இனிமேலாவது ஒத்துக்கொள்வார்களா? இதைவிட கண்டியில் நடைபெற்ற சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் கூட்டமொன்றிலும் அநுரா இனவெறிக்கூச்சல் இட்டுள்ளான். தமிழ் தீவிரவாதிகளுடன் அரசு பேசக் கூடாது. ஈழப்போராட்டத்தை ஒடுக்கிவிட்டுத் தான் பேசவேண்டும் என்று ஓலமிட்டுள்ளான்.

★

www.tamilarangam.net

# இந்திய, ஈழ நலன்கள் பிரிக்கப்பட முடியாதவை
# தூக்கிய துப்பாக்கிகளின் வேலை முடியவில்லை
# ஆயுதங்களை நாங்கள் ஆயத்தமாகவே வைத்திருக்கிறோம்

## தோழர் பத்மநாபா ஈழமக்களுக்கு விடுத்துள்ள செய்தி

பேச்சு வார்த்தையை தந்திரோபாயமாக பயன்படுத்துவது என்பதில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெளிவாக உள்ளது. பேச்சு வார்த்தை வேண்டவே வேண்டாம் என்று நிராகரிக்கும் போக்கு உலக அரங்கில் ஈழப் போராளிகளை சமாதானத்தின் எதிரிகளாக காட்டும், ஆக்கிரமிப்பாளரின் முயற்சிகளுக்கு வழிவகுக்கும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கருதுகிறது. தற்காலிக யுத்த நிறுத்தமும் பேச்சு வார்த்தையும் சம்பந்தமாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் **க. பத்மநாபா** ஈழ மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் ஈழ விடுதலை அமைப்புக்கள் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என ஈடுபடுமாயின் கடந்த காலத்தில் தமிழ் பாராளுமன்ற அரசியல் வாதிகள் நடந்து கொண்ட முறைபோல் இருக்காதா எனச் சிலர் கேட்கக்கூடும். ஆனால் இது ஒரு **தற்காலிக போர் நிறுத்தம்** மட்டுமே என்பதையும், நாமோ நமது சகோதர அமைப்புக்களோ ஆயுதங்களை கீழே போடவில்லை என்பதையும், எம்மிடம் உள்ள



தோழர் க. பத்மநாபா

ஆயுதங்களுக்கு தற்காலிக ஓய்வு மட்டுமே கொடுத்திருக்கிறோம் என்பதையும் தெளிவாக வலியுறுத்துகிறேன். சிறீலங்கா அரசு இந்த இடைக்காலத்தில் தன்னை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளில் இறங்கியிருப்பதை நாம் அறியாதவர்கள் அல்ல. ஆனால் நாமும் எம்மை அனைத்து வழிகளிலும் பலப்படுத்திக்கொள்ளவும், இக்காலகட்டத்திற்குரிய வேலைத் திட்டங்களில் ஈடுபடவும் முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அச்செய்தியில் **இந்தியாவின் நட்பையும் மீறி நாங்கள் போராடுவோம் என்று யாராவது கூறுவார்களாயின் அது எமது இன்றைய யதார்த்தத்துக்கு புறம்பான அதீத துணிச்சல் மனோபாவத்தின் வெளிப்பாடேயாகும்**. அவ்வாறான நினைப்பானது ஒன்றில் எம்மை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும், நீண்டகால அடிப்படையில் ஈழப் போராளிகளை **பிற்போக்குவாதிகளின் கரங்களில் வீழ்த்திவிடும். ஈழ மக்களின் நலனும் இந்தியாவின் நலனும் இந்துமாக் கடல் பிராந்திய நலனும் பிரிக்கப்படமுடியாதவை. எமது போராட்டத்திற்கு எதிரான சில தீய சக்திகள் இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லவர்கள் போல் நடித்து உங்கள் சிந்தனையை குழப்பக்கூடும்**. அவ்வேளைகளில் நீங்கள் மிகவும் எச்சரிக்கையாகவும், விழிப்போடும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எமது இலக்கை அடையும் வரை எமது பயணம முடியப் போவது இல்லை. இவ்வாறு தனது செய்தியில் குறிப்பிட்டுள்ள தோழர் **பத்மநாபா** வரையறுக்கப்பட்ட கால இடைவெளிக்குள் சிறீலங்கா அரசாங்கம் தான் ஒத்துக் கொண்டபடி ஈழ மக்களுக்கான முழுமையான அரசியல் தீர்வை முன்வைத்து நடைமுறைப்படுத்த தவறுமாயின் எமது ஆயுதம் போராட்டம் முன்பை விடவும் முனைப்படையும் என்று உறுதியாக அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உலக இளைஞர்களை இணைக்கும் பொதுமேடை சர்வதேச சமாதானத்துக்கான போராட்டமே

சென்னையில் நடைபெற்ற அனைந்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட மாநாட்டில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் தோழர் ஜீவா கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார். இளம் மக்களது கலகங்கள் முதலாளித்துவ உலகின் பிடரியை பிடித்து குலுக்கி வருகின்றன. வேலை செய்யும் உரிமைக்காகவும், கல்வி பெறும் உரிமைக்காகவும் போரிடும் இளம் மக்கள் தொகை முதலாளித்துவ அமைப்பெங்கும் பெருகி வருகிறது. சமூக சக்தியாகி வரும் இளம் மக்களில் பலர் இருட்டில் தடுமாறுகிறார்கள். புதிய வாழ்க்கைக் காகவும், சுபீட்சத்துக்காகவும் போராடும் இளம் மக்களை சரியான திசைவழியில் வழி நடத்தி தலைமை அளிக்கும் பொறுப்பு ஒவ்வொரு நாட்டிலுமுள்ள புரட்சிகர கட்சிகளின் தோள்களில் வரலாற்றால் சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச பாட்டாளி வர்கத்தின் பாதுகாப்பு அரணாகவும், நாசிசத்துக்கும், பாசிசத்துக்கும், ஜப்பான் இராணுவ மேலாதிக்கத்துக்கும் சாவு மணியடித்த பூமியாகவும் விளங்கும் சோவியத் நாட்டில் நடைபெறும் 12 வது உலக இளைஞர் விழா நெருங்கி வருகிறது. சர்வதேச சமாதானத்துக் கான போராட்டமே உலக இளைஞர்களை இணைக்கும் பொது மேடையாகும். இந்த வகையில் ஈழத்தில் போராடும் நாம் இந்துமாக்கடலில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின சதி முயற்சிகளை முறியடிக்கவும் போராடுகிறோம். இந்தியத் துணைக் கண்டத்தில் கவிந்துவரும் போர் மேகங்களை தகர்க்க ஈழ விடுதலை மூலம் வழியமைப்போம். அது மட்டுமல்ல ஈழப் போராட்டம் இந்தியாவின் பாது காப்புடன் பின்னிப்பிணைந்திருப்பதுடன், சிறீ லங்கா பாட்டாளிவர்க்கத்தின் விடுதலைக்கும் முன் தேவையாகும். இவ்வாறு தோழர் ஜீவா பேசினார். இம்மாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட கட்சி தமிழ் மாநில செயலாளர் தோழர் ப. மாணிக்கம், க. மாணிக்கம், ஈரானிய மாணவர் அமைப்பு பிரதிநிதி, பலஸ்தீன மாணவர் அமைப்பு பிரதிநிதி ஆகியோரும் அனைத்திந்திய இளைஞர் பெரு மன்றத்தின் தோழர்களும் உரையாற்றினர்.

## கொலைப்பட்டாளங்களின் விசாரணையில், குடும்பப் பெண்

ஜூன் 6-

சிறீலங்கா கூலிப் பட்டாளங்களினால் ஈழப் பிரதேசங்களிலுள்ள இளைஞர்களும் யுவதிகளும் காரணமின்றிக் கைது செய்யப்பட்டு மனித வதைக் கூடங்களுக்கு இழுத்துச் செல்லப்படுவதும், அங்கு விசாரணை என்ற பெயரில் நிர்வாணமாக்கப்பட்டுச் சித்திரவதைகள் செய்யப்பட்டு வருவதும் தொடர்கிறது. இப்படி யாழ்ப்பாணம் தீவுப்பகுதியிலிருந்து விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் பாதிக்கப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கல்விச் சேவையில் பணிபுரியும் இவ் இளந்தமிழ்ப் பெண்ணும் இவரது கணவனும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து இராணுவக் கூலிகளால் விசாரணைக் கென அழைத்துச் செல்லப்பட்டபோதும் இருவரும் தனிமைப் படுத்தப்பட்டே விசாரிக்கப்பட்டுள்ளார்கள்,

சிறீலங்கா இராணுவ மிருகங்கள் கணவனையும் மனைவியையும் தனித்தனியே விசாரிப்பதாகச் சொல்லித் தங்கள் வதை முறைகளின் மூலம் வெறியாட்டத்தினை முடித்துக் கொண்டு அவர்களை விடுதலை செய்திருக்கின்றன.

பாதிக்கப்பட்ட இளம் பெண் உத்தியோகத்தர் பின்னர் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## இத்தாலியர்மீது துப்பாக்கிசூடு! சுற்றுலாப் பயணிகள், உயிருக்கும் ஆபத்து!

ஜூன்6,

மட்டக்களப்பில் உள்ள பொத்துவில் என்னும் இடத்தில் சுற்றுலாப் பயணிகளான இத்தாலியர்கள் இருவர்மீது சிறீலங்கா இராணுவக் கூலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். கார் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த இவர்களை மறித்து துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. இவர்கள் பயணம் செய்த கார் இராணுவத்தினரால் மறிக்கப் பட்டபோது நில்லாமல் சென்றது என்றும், அதனாலேயே தமது படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்தனர் என்றும் சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புரட்சிகரப் படையின் முன்னணித் தோழனின் மக்களுக்கான மரணம்
# புரட்சிகரப் போராளியின் புனித உடலுக்கு மக்கள் அஞ்சலி

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கிய உறுப்பினரும், மக்கள் விடுதலைப் படையின் மத்திய இராணுவ ஆணைக்குழுவின் உறுப்பினரு மானதோழர் ***ராஜன்*** மக்களின் விடுதலைக்காக தியாகி யானார். ஈழ வாலிபமுன்னணி, ஈழமாணவர் பொது மன்றம் ஆகிய வெகுஜன அமைப்புக்களில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் கருத்துக்களை முன்வைத்து பணியாற்றி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையை வழங்கிய தோழர் ***இரவீந்திரன்*** என்கின்ற ***இராஜன்*** கோப்பாய் மண்ணில் பிறநதவர். இவர் சர்வதேச விடுதலைஇயக்கமொன்றின் பாசறையில் இராணுவக் கல்வி கற்றவர். தோழர் இராஜனின் உடலை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்கள் தமிழகம் கொண்டுவந்தனர். சிவபுரம் என்னும்



***தோழர் ராஜன்***

கிராமத்தில் இறுதி வணக்க ஊர்வலம் ஏற்பாடாகி இருந்தது. புரட்சிகர போராளியான இராஜனின் உடலுக்கு பெருந் தொகையான மக்கள் இறுதி வணக்கம் செலுத்தினர். மக்கள் விடுதலைப் படை யினரின் இராணுவ மரியாதையுடன் இறுதி ஊர் வலம் நடைபெற்றது. இறுதி வணக்கப் பொதுக் கூடடத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ***செயலாளர் நாயகமும்***, ஈழமக்கள் புரட்சிகர இராணுவ ஆணைக்குழு அதிபருமான தோழர் ***க.பத்மநாபா***, தோழர் ***ஈழமணி***, மத்திய இராணுவ ஆணைக்குழு உறுப்பினர் தோழர் ***கமல்***, மற்றும் அனைத்துககட்சி பிரமுகர்கள் உரை யாற்றினர்.

### *கூட்டுச்சதி அம்பலம்! மட்டுநகரில் மதக்கலவரத்தை தூண்டிவிட மொசாட்டுடன் 15 கோடி ரூபா ஒப்பந்தம்.*

மட்டக்களப்பில் தமிழ் பேசும் மக்களி டையே மதக் கலவரங்களுக்கு தூபமிட சிறீலங்கா அரசு மொசாட்டின் துணையை நாடியது. இதன்படி மொசாட் 15 கோடி ரூபா ஒப்பந்த அடிப்படையில் மதக்கல வரத்தை ஏற்படுத்த ஒப்புக்கொண்டது. மட்டக்களப்பில் தமிழர்களுக்கும், முஸ்லீம் களுக்கும் இடையே தூண்டிவிடப்பட்டமதக் கலவரம் சிறீலங்கா அரசினதும், மொசாட் கொலைக்கும்பலதும் கூட்டுச்சதி என்பது இப்போது அம்பலமாகி உள்ளது இது தொடர்பான ஆதாரங்கள் தம்மிடம உள்ள தாக ***ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி*** (EPRLF) தெரிவித்துள்ளது.

திட்டமிட்ட சதியினால் தூபமிடப் பட்ட இக்கலவரத்தால் காரைதீவில் ஏழரைக்கோடி ரூபா நஸ்டம் ஏற்பட்டுள் ளது. கலவரம் தொடர்பான உண்மை நிலையினை விளக்கும் வீடியோ படங்களை யும் ஈழமககள் புரட்சிகர விடுதலை முன்னணி எடுததுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அடக்குமுறைகளை தகர்க்க மலையகம் நிமிர்கிறது

## தொழிலாளர் வேலை நிறுத்தம்-வர்த்தகர்கள் கடையடைப்பு

ஜூன்: 7 அன்று தலவாககொல்லை ஹெலிறூட் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளியும் 3 பிள்ளைகளின் தந்தையுமாகிய சுந்தர்ராஜ் (வயது 33) என்பவரையும் அவரது உறவினரான, புத்தளத்தில் இருந்து வேலை தேடி வந்திருந்த ஜெயமூர்த்தி (வயது 22) என்பவரையும் தீவிரவாதிகள் என்ற பேரில கைது செய்து தலவாகலைலை நகரில் உள்ளங்கியுடன் மாத்திரம அழைத்து வரப்பட்டதுடன் அவர்கள் புலிகள் என்றும் எனவேதான் இப்படி அழைத்துச் செல்கின்றோம என்றும் பொலிசார் கூறியுள்ளனர் அத்துடன் தலவாக்கொல்லை பொலஸ் நிலையத்தில அவர்கள் இருவரையும் மிகக்கடுமையான முறையில் தாக்கியதுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிங்களவர்களையும அழைத்து அவ்விருவரையும தாக்கச் சொல்லியிருக்கின்றார்கள். இதனால இவர்கள கடுமையான வெளிக்காயங்களுக்கும உட்காயங்களுக்கும ஆளானார்கள.

ஜூன் 8ம தேதி மேற்படி சமபவத்தினால் ஆத்திரமுற்ற ஹெலிறூட தோட்டத்தைச் சேர்நத 5,000 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்ட இருவரையும் விடுவிக்க கோரி வேலை நிறுத்தம் செய்துள்ளனர். மலையகத்தின் தொழிலாளர்கள் போராட்ட வரலாற்றிலேயே முதன்முறையாக தலவாக்கொல்லை நகர தமிழ் வர்த்தகர்களும் ஒரு நாள் கடையடைப்புச் செய்து தொழிலாளர்களுக்கு தமது ஆதரவை அளித்தனர். இதன் எதிரொலியாக கைது செய்யப்பட்ட சுந்தர்ராஜ் விடுவிக்கப்பட்டார்.

கைது செய்யபட்ட ஜெயமூர்த்தியையும் விடுவிகக கோரியும் அத்துடன் பொலிசாரின் மிருகத்தனமான செயல்களை எதிர்க்கும முகமாகவும் மலையகத் தொழிலாளர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யபபட்டால் அவர்கள் நியாயமான முறையில் விசாரிக்கப்பட வேண்டும எனவும் தொழிலாளர்கள் கோரியுள்ளனர். மேற்படி கோரிக்கைகள நிறைவேற்றப்படும என்று அரசினால உறுதியளிக்கப்படும் வரை கால வரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் பத்தனை, தலவாக்கொலலை, லிந்துலை ஆகிய பகுதிகளில் உள்ள 100 தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 60,000 தோட்டத் தொழிலாளர்கள் குதித்துளளனர்.

## ஈழப்போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்து: சிறீலங்கா அரசுக்கு சரத் அறிவுறுத்தல்

ஜூன் 22,

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு தற்போது யுத்தநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஈழப் போராளிகளுடன் சிறீலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தையில ஈடுபடவேண்டும். இவ்வாறு சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சரத்முத்வேட்டுகம சிறீலங்கா பாராளுமன்றத்தில் அவசரகாலநிலை நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் தமது உரையில் வடபகுதியில் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேரை குடியமர்த்த போவதாக அரசு கூறுகிறது. இது நிலைமையை மிகவும் மோசமாக்கும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிறைவேற்று அதிகாரம் வழங்குவதாகவும், இராணுவச் சட்டத்தை பிறப்பிக்கப் போவதாகவும் அரசு அறிவித்துள்ளது. இதுவும் நிலைமையை மிகவும் பாதித்துவிடும். இனப்பிரச்சனை தீர்க்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் மக்கள் பலத்த ஆபத்தை எதிர்நோக்க வேண்டிவரும் என்றும் குறிப்பிட்டார். சரத் உரையாற்றும் போது குறுக்கிட்ட சிறீலங்கா தேசிய பாதுகாப்பு அமைச்சர் ''நீங்கள் தீவிரவாதிகளுக்காக பேசுகிறீர்கள்'' என்று கூறியபோது இல்லை நான் சகல மக்களுக்காகவும பேசுகிறேன் என்று சரத் கூறினார்.

★

www.tamilarangam.net



ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வன்முறையில் காயம்பட்டவர்கள்

## திருமலை வேட்டைக் காடாகிறது. ★ 50 பெண்கள் கற்பழிப்பு ★ 50,000 பேர் அகதிகள் ★ கிராமங்கள் சூறையாட்டம்.

மே 5, தெகிவத்தை என்னும் இடத்தைசேர்ந்த சிங்களக் காடையர்கள் மேன்காமத்தில் உள்ள தமிழர்களை ஆயுதங்கள் சகிதம் வந்து தாக்கினார்கள். இந்த மக்களை பாதுகாக்க ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும், ஈழப்புரட்சி அமைப்பும் தக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சிங்களக் காடையர் கூட்டத்திற்கு பாதுகாப்பளிக்க சிறீலங்கா இராணுவக் கூலிகள் வந்து சேர்ந்தனர். இவர்களின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 35 தமிழர்கள் கொல்லப்பட்டனர். சிங்களக் குண்டர்கள் கூட்டம் தமிழர்கள் வீடுகளை தீயிட்டு பொசுக்க ஆரம்பித்தது. உடமைகளை யெல்லாம் இக்கும்பல் சூறையாடியது.

இதுபோல் ஜூன் 1ம் திகதி மல்லிகைத்தீவு என்னும் தமிழ்க் கிராமத்தை சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகள் சுற்றிவளைத்தன. இதில் 50க்கும் மேற்பட்ட பெண்கள், குழந்தைகள், வாலிபர்கள் ஆகியோரை மிலேச்சத்தனமாக தாக்கிவிட்டு வதை முகாமுக்கு இழுத்துச்சென்றதோடு மூன்று பேரை சுட்டும் கொன்றனர். இதன்பின்பு சிறீலங்கா இராணுவத்தின் உதவியுடன் சிங்களக் குண்டர் படை பல தமிழ்க் கிராமங்களை கொள்ளையிட்டு தீவைத்தனர். சிறீலங்கா இராணுவ கூலிகளும் குண்டர்படையும் நடத்திய படுகொலை வேட்டையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் பலியாகினர். ஐம்பதுக்கு மேற்பட்ட இளம்பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். ஆக்கிரமிப்பாளரால் சிதைக்கப்பட்ட தமிழர்களின் பாரம்பரிய பூமியான திருமலை மண்ணின் தமிழ்க் கிராமங்களில் சில

★ மேன்காமம் ★ கிளிவெட்டி ★ கங்குவேலி
★ மல்லிகைதீவு ★ ஈச்சலம்பத்தை ★ புளியடிச் சோலை
★ பட்டத்திடல் ★ வாக்கால்சோலை

இந்த எழில்மிகு கிராமங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்ட 50,000 க்கும் மேற்பட்ட மக்கள் காடுகளுக்குள் தஞ்சம அடைந்துள்ளனர். வெளியே வர அஞ்சி உள்ளே உணவின்றி வாடும் இந்த மக்களின் உணவுத் தேவைகளை விடுதலை இயக்கங்கள் தம்மால் முடிந்தவரை கவனிக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மட்டுநகரில் மனித வேட்டை வதை முகாமில் வாடும் வாலிபர்கள்.

ஜூன் 17, விசாரணை என்ற பெயரில் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து சித்திரவதைக் குட்படுத்துவதன் மூலம் குரூர திருப்தி அடைந்து கொள்ளும் சிங்களராணுவம் இன்றும் மட்டக்களப்பு ஆரையம்பதியில் 150 தமிழ் இளைஞர்களை வதைமுகாமுக்கு இழுத்துச் சென்றுள்ளது. எவ்விதக் காரணங்களுமில்லாமல் இந்த அப்பாவி தமிழ் இளைஞர்கள் இராணுவக்குண்டர்களினால் சிறீலங்கா வதைமுகாமுக்கு இழுத்துச் செல்லப் பட்டிருக்கிறார்கள். காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கிக் காயப்படுத்தியும், நிர்வாணமாக்கிச் சித்திரவதை செய்வதன் மூலம் வலி, வேதனை அவமானத்துக் குட்படுத்தியும் மனித நாகரிகங்களை எல்லாம் காலில் போட்டு மிதித்துக் கேவலப்படுத்தி வெறியாட்டம் ஆடுவதற்கு இன்று இந்தத் தமிழ் வாலிபர்களைக் கௌவிச் சென்றிருக்கின்றன ஆக்கிரமிப்பு படைகள்.

## பாசிஸ்டுபடைகளின் தேடுதல் வேட்டை: அப்பாவி மக்கள் இம்சை

ஜூன் 15, மனித வேட்டையாடும் சிறீலங்கா அரசின் ஆயுதப் படையினர் யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் தங்கள் 'தேடுதல் அட்டூழியங்களை' நிகழ்த்தியுள்ளனர். ஆங்காங்கே வீதிதோறும் நின்று நடமாடும் மக்களைத் துப்பாக்கி மூலம் மிரட்டி இம்சைப்படுத்தி விசாரித்துள்ளனர். அவலை நினைத்து உரலை இடித்த கதையாக பயங்கர வாதிகளை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு அப்பாவி மக்களைக் கொடுமைப்படுத்திக் கொலை செய்து வருகிறது சிறீலங்கா அரசாங்கம். அரியாலையில் நடந்த சோதனை வேட்டையின் பிறகு அப்பாவி மக்கள் ஐந்து பேரை ராணுவக்கூலிகள் வதைமுகாமுக்கு ஏற்றிச் சென்றுள்ளனர்.

## திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்துக்கு தேசிய பாதுகாப்பு நிதி பயன்படுகிறது.

சிங்கள மக்களிடமிருந்து தேசிய பாதுகாப்பு நிதிக்கு திரட்டப்பட்ட 4கோடி ரூபாயில் 50 இலட்சம் ரூபா தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களை குடியமர்த்தும் திட்டத்துக்கு செலவு செய்யப் பட்டுள்ளது. இந்தப்பணம் தமிழர் பகுதிகளில் குடியேறும் சிங்களவருக்கு வீடுகளை அமைக்கவும் நிதிவசதிகளை வழங்கவும், அவர்களுக்கு ஆயுதங்களை வாங்கவும் செலவு செய்யப்படவுள்ளது.

## கூலிப்படைகள் துப்பாக்கிப்பிரயோகம்.

ஜூன் 21

யாழ்ப்பாணம் பூநகரிக்கு அருகில் சிறீலங்கா ராணுவம் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த 3 இளைஞர்களைத் துரத்திச் சுட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்தத் தமிழ் இளைஞர்களை நோக்கி ஆயுதப்படையினர் சுட்டதில் ஒரு இளைஞர் உயிருடனும், மற்றொருவர் பலத்த காயங்களுடனும் தப்பிச் சென்றுள்ளனர். ஒரு இளைஞர் என்ன ஆனார் என்று யாருக்கும் தெரியவில்லை. தற்காலிக போர் நிறுத்தம் ஆரம்பமான பின்புதான் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

## இனப்பிரச்சனைக்கான தீர்வை முன்வையோம்: நாடுவிற்கப்படுவதை அங்கீகரியோம். அநுராவின கூக்குரல்

இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு எடுக்கப்படும் எந்த முடிவும் பொதுத்தேர்தல் ஒன்றின் மூலம் சிங்களமக்களின் அங்கீகாரததை பெறத்தவறினால் அதனை சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஒருபோதும் அங்கீகரியாது. எமது நாடு விற்கப்படுவதை சுதந்திரக்கட்சியும் மகாசங்கத்தினரும ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இவ்வாறு கூறியுள்ள சிறீலங்காவின் எதிர்கட்சி தலைவர் அநுரா பண்டாரநாயக்கா இனப்பிரச்சனைக்கான எந்த தீர்வையும் தமது கட்சி முன்வையாது என்றும் கூறியுள்ளார்.

## தொண்டர்படை குண்டர்களின் வெறித்தனம்! பேருந்து வண்டியில் உருக்குலைக்கப்பட்ட ஈழமக்கள்

ஜூன் 6, திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பேருந்து வண்டி சிங்களக் காடையர்களால் சுற்றிவளைக்கப் பட்டது. சிறீலங்கா அரசின் குண்டர்படையான இக் காடையர்கள் நவீன ஆயுதங்களுடன் காணப் பட்டனர். பேருந்தை சுற்றிவளைத்த காடையர்கள் சிங்களவர்கள் மட்டும் இறங்கிச் செல்லுமாறு கூறி விட்டு தமிழ் பிரயாணிகள் அனைவரையும் நோக்கி துபபாக்கிப் பிரயோகம் செய்தனர். பின்பு கோடாரிகளாலும், கத்திகளாலும் தமிழர் உடல்களை கண்டதுண்டமாக வெட்டினார்கள் இந்த மிருகத்தனத்திற்கு பதின்மூன்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் பலியானார்கள். பலர் படுகாய மடைந்துள்ளனர் சிறீலங்கா அரசால் ''தொண்டர் படை'' என்ற பெயரில் ஆயுதப்பயிற்சியளிக்கப்பட்டு வரும் இனவெறிகொண்ட குண்டர் கூட்டமே இக் கொலை வெறி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

www.tamilarangam.net

# இராணுவத்தீர்வு காண்பதில் படுதோல்வி!
# அரசியல்தீர்வுகாண ஜே. ஆர். நிர்ப்பந்திக்கப் படுகிறார்

மே : 26 இலங்கையில் இனப்பிரச்சனை இப்படியொரு மோசமான நிலைக்கு வந்திருப்பதற்கான பொறுப்பில் பெரும் பங்கு ஜெயவர்த்தனா அரசையே சாரும் என்று லண்டனைச் சேர்ந்த டைம்ஸ்' பத்திரிக்கை தலையங்கம் எழுதியுள்ளது. 25.5.85 அன்று வெளியாகியுள்ள அந்தத் தலையங்கத்தில் மேலும் கூறியிருப்பதாவது; சில தகவல்களின் படி, மே மாதத்தில் மட்டும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சுமார் ஒரு லட்சம் தமிழர்கள் இந்தியாவில் அகதிகளாகவுள்ளனர்; மேலும் 2000 இற்கும் மேற்பட்டவர்கள் பிரிட்டனில் புகலிடம் தேடி வந்துள்ளனர். இலங்கைப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும்படி ஜெயவர்த்தனா நிர்ப்பந்திக்கப் படுகிறார் என்பது தெளிவாகத்தெரிகிறது. ஆனால் அவரே அதற்குப்பதிலாக ராணுவச்சட்டத்தைக் கொணடுவருவதாக மிரட்டியிருக்கிறார். இனப் பிரச்சனையைக் கையாளும் விதம் தொடர்பாக ஜெயவர்த்தனா அரசு மேலும் பழிதேடிக் கொள்ளாமல் தப்பிக்க விரும்பினால் அது தற்போதைய நிலைக்கேற்றபடி தன்னை மாற்றிக் கொண்டு ராணுவத்தின் மூலம் தீர்வுகாணும் தனது முயற்சியை கைவிடவேண்டும். ஏனெனில் ஜெயவர்த்தனா ஏற்கனவே பல விஷயங்களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ராணுவத்தின் மூலம் தீர்வு காணும் முயற்சி தோற்றுவிட்டது என்பது அப்பட்டமாகத் தெரிவதால், சிங்கள மக்கள் தற்போதைக்கு மீண்டும் பேச்சுவார்த்தை துவக்கக் கூடிய நிலையில் உள்ளனர்; முன்னர் அவர்கள் மறுத்திருக்கக் கூடிய ஒரு தீர்வை இப்போது அவர்கள் ஏற்கும்படி செய்ய ஜெயவர்த்தனா இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



## திருச்சபைகள் கவுன்சில் குற்றம் சாட்டுகிறது! படுகொலைகளின் சூத்திரதாரி சிறீலங்கா அரசே!

கடந்த சில வாரங்களாக இலங்கை இனப் பிரச்சனையில் வன்முறைகள் அதிகரித்ததற்கு சிறீலங்கா அரசு இராணுவ உத்தியை மட்டும் நம்பியிருப்பதே காரணம் என்று உலக திருச்சபைகள் கவுன்சில் (WCC) குற்றம சாட்டியுளளது. ஜெனீவாவில் உள்ள உலக திருச்சபை கவுன்சில் (WCC) தலைமையகத்திலிருந்து அதன் தலைவர் எமிலியோ கஸ்டரோ இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக மேலும் கூறுகையில், ''சிறீலங்கா இராணுவத்தில் கட்டுபாடு இல்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காண சிறீலங்கா அரசு முயற்சி செய்வதே வன்முறை அதிகரிக்கக் காரணம். இப்பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வு காண சிறீலங்கா அரசு முன்வரவேண்டும். அதன் மூலம் தமிழர் பகுதிகளுக்குத் தேவையான சுயாட்சி கிடைக்கச்செய்யலாம் என்றார். மேலும் அவர் கூறுகையில், சிறீலங்கா அரசு கொடுமைகளில் ஈடுபட்டுள்ளதென்றும் உள்நாட்டுச்சண்டை போல மாறியுள்ள வன்முறைகளில் பலர் இறந்திருப்பது குறித்து கவுன்சில் கவலை தெரிவிப்பதாகவும் கூறினார். அத்துடன் அரசியல் தீர்வு காண மேலும் காலதாமதம் செய்தால் தீர்வு காணவே முடியாத நிலை உருவாகலாம் என்றும் கவுன்சில், சிறீலங்கா அரசை எச்சரித்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அன்னையரையும், சகோதரிகளையும் மானபங்கப்படுத்தாதே! எமது கல்விக்கு இடையூறு செய்யாதே!

சிறீலங்கா நவபாசிச முதலாளித்துவ அரசே!

★ எமது ஈழதேசத்தில் உனது காட்டுமிராண்டிச் செயல்களை உடன் நிறுத்து!

★ உனது கொலைவெறி பிடித்த கூலிப் பட்டாளத்தை கோரச் செயல்களுக்கு ஏவி விடாதே!

★ எமது அன்னையரையும், சகோதரிகளையும் மானபங்கப்படுத்தாதே!

★ எமது பாடசாலைகளையும், நூல்நிலையங்களையும் எரியூட்டாதே!

★ எமது கல்விக்கு குழிபறிக்காதே!

★ எமது மக்களை படுகொலை செய்யாதே!

இவ்வாறு **ஈழ மாணவர் பொதுமன்றம்** (G U. E. S.) வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் கூறப் பட்டுள்ளது.

ஈழ மாணவர்கள் தமக்குரிய வெகுஜன அமைப்புக்களில் அணிதிரண்டு, வெகுஜனப் போராட்டங்கள் ஊடாக மன உறுதி பெற்று புதிய வழிகளில் முன்னேற வேண்டும் என்றும், எமக்கென்ன எதுவும் நடக்கட்டும் என்று இருந்துவிட்டால், எமக்கென்று எதுவும் இருக்காது எனவே ஈழத்தை மீட்கும் பணியில் தொடர்ந்து முன்னேறுவோம் என்றும் அந்த துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "போலியான சமாதானம் வேண்டாம்" ஈழத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம்

ஜூலை 2, எங்களை சிங்கள அரச பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்க திருப்பித் தாக்குதலைத் தொடருங்கள்' என்று விடுதலைப் போராளிகளுககு ஈழமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். போர் நிறுத்த ஒப்பந்தத்தை சிறீலங்கா அரசு மீறி வருவதை அடுத்து ஈழமக்களிடையே கொந்தளிப்பு ஏற் பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள மனிப்பாய், உரும்பிராய் மற்றும் மூன்று இடங்களில் போர் நிறுத்தத்தை அரசு மீறுவதை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஏராளமான மாணவர்களும் கலந்து கொண்டனர். "போர் நிறுத்த ஒப்பந்தத்தை சிறீலங்கா அரசு மீறுகிறது. எனவே நமக்குப் போர் நிறுத்தம் வேண்டாம். எங்களைப் பாதுகாக்க ஈழப் போராளிகள் மீண்டும் தாக்குதல்களைத் தொடரவேண்டும்" "எங்களுக்குச் சமாதானம் தேவைதான் ஆனால் போலியான சமாதானம் வேண்டாம்." "இந்திய அரசின் நல்லெண்ண முயற்சிகளை சிங்கள அரசு புறக் கணித்துவிட்டது. எங்களுக்குத்தேவை தனி ஈழம்தான" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோஷம் எழுப்பினார்கள்.

## "இஸ்ரேலிய, இங்கிலாந்து கூலிப்படைகள் இலங்கைக்த்தீவைவிட்டுவெளியேற்றப்பட வேண்டும்."

ஜூலை 3, ஈழத்தமிழர் பிச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் இஸ்ரேலிய (மொசாட்) நாசகாரக் கும்பலையும், இங்கிலாந்து கூலிப்படையினரையும் உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று தமிழக அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் வற்புறுத்தியுள்ளார். ஈழத்தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதற்காக இந்திய அரசு நல்லெண்ணத்துடன் எடுத்துவரும் நடவடிக்கைகளை விவரித்த அமைச்சர், அதற்கேற்றபடி சிறீலங்கா அரசும் நடந்து கொள்ளவேண்டும் என எச்சரித்தார்.

இஸ்ரேலிய, இங்கிலாந்து கூலிப்படைகளின் உதவியுடன் ஈழத்தமிழர்கள் மீது சிறீலங்கா அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்ட காட்டுமிராண்டித்தனமான இனப்படுகொலை நடவடிக்கைகளால் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் இந்தியா வந்துள்ளனர். மீன் பிடிக்கச் சென்ற ராமேஸ்வர மீனவர்கள் மீது சிறீலங்காவின் கடற்படைக் குண்டர்கள் வெறிகொண்டு தாக்குவதும், அவ்வப்போது தமிழக மீனவர்களிற் சிலர் கொலையுண்டு போவதும் நிகழ்ந்திருக்கிறது. இத்தனைக்கும் மேலாக, சிறீலங்காவின் இனவெறிப் படைகளுக்கு ஆயுதங்களை ஏற்றிச்சென்ற விமானம் நமது நாட்டில் தரையிறங்கியபோது, நல்லெண்ண அடிப்படையில் அந்த விமானத்தையும் விடுவித்தது இந்திய அரசு. இந்த நல்லெண்ணத்தையும் அக்கறையையும் இலங்கை அரசு மதிப்பதாக இருந்தால் உடனடியாக இஸ்ரேலிய அதிரடிப் படையினையும் இங்கிலாந்து கூலிப்படையினரையும் வெளியேற்ற வேண்டும் என்றும் பண்ருட்டி ராமச்சந்திரன் குறிப் பிட்டுள்ளார்.

பேச்சு வார்த்தைகளின் மூலம்தான் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் இந்தியாவால்தான் அதற்குப் பெரிதும் உதவமுடியும் என்று நமது பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசிய பிறகு சிறீலங்கா அதிபர் பேட்டிதருகிறார். உடனேயே ஈழத்தமிழர்களைப் படுகொலை நடவடிக்கைகள் மூலம் அழித்தொழித்து விடுவதற்குச் சிங்களக் கூலிப்பட்டாளத்தை ஏவி விடுகிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போர்நிறுத்த வேளையிலும் இராணுவ பயங்கரவாதம் தொடர்கிறது எமது மக்களை காக்கும் நடவடிக்கையில் இறங்குவோம்

## ஈழத்தேசிய விடுதலை முன்னணி எச்சரிக்கை

பிரதானமான விடுதலை இயக்கங்களாகிய நாம் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் படி எமது இராணுவ ரீதியான நடவடிக்கைகளை தறகாலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம். ஆனால் சிறீலங்கா அரசின் ஆயுதப் படைகள் எமது மக்களை தொடர்ந்து துன்புறுத்தி வருகின்றன.

திருக்கோணமலையில் பல இடங்களில் பதட்ட நிலையும், பயங்கரவாதமும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. சிறீலங்கா விமானப்படையினரும், போலிஸ் கமான்டோக்களும் தமது, திடீர் படையெடுப்புக்களையும், தேடுதல் வேட்டைகளையும், தொடர்கின்றனர். தமிழ் வீடுகளை கொள்ளையடித்தும், பொதுமக்களை தாக்கியும, பெண்களை கற்பழித்தும் வருகின்றனர்.


கிளிவெட்டி, மல்லிகைத்தீவு, மூன்றாவது கொலனி ஆகிய எரிக்கப்பட்ட தமது கிராமங்களில் இருந்து விரட்டியடிக்கபபட்ட தமிழ்மக்கள் மீண்டும் அங்கு சென்று குடியேற முற்பட்டபோது சுடப்பட்டு துரத்தப்பட்டுள்ளனர், தமிழ் விவசாயிகள் தமது நிலங்களில் அறுவடை செய்ய முயன்ற போதும் அவர்கள் சுடப்பட்டுள்ளனர்.

சிறீலங்கா அரசாங்கமானது கண்காணிப்பு மற்றும் தடைப்பகுதிகள் தற்காலிகமாக விலக்கப்பட்டுள்ளது என்று உரிமை கோரும் போதும் கூட சிறீலங்கா கடற்படையினர் தமிழ் பேசும் மீனவர்களை சுற்றிவளைத்து அவர்களை முள்ளுக்கம்பிகளால் தாக்கியுள்ளனர். பல சமயங்களில் மீன்பிடிக்கும் படகுகளை நோக்கி சுட்டு அவற்றை திருப்பி அனுப்பியுள்ளனர், தமிழ் மீனவர்கள் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டு கடலில் மீன் பிடிக்கச் செல்ல அஞ்சுகின்றனர்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு அக்கரைப்பற்று போன்ற இடங்களில் பொதுமக்கள் வழிமறிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டுள்ளனர். பல சமயங்களில் எவ்வித காரணமுமின்றி தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறீலங்கா ஆயுதப்படையினரின் இவ்வாறான தொடர்ச்சியான துன்புறுத்தல், பயமுறுத்தி பணிய வைத்தல், அப்பாவிமக்கள் தாக்கப்படுதல் என்பவை ''தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தத்தை'' சிறீலங்கா அரசு கடுமையாக மீறுவதை எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு தொடரும் வன்முறைகளை மிகவும் வன்மையாக கண்டிக்கும் நாம் சிறீலங்கா அரசுக்கு எச்சரிக்கை விடுக்கிறோம். இராணுவ பயங்கரவாதம் தொடருமானால் எமது மக்களை பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம், அதன்பின் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு முற்றுப்புள்ளியிட்ட பொறுப்பை சிறீலங்கா அரசே ஏற்க வேண்டும். இவ்வாறு ஈழப்புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஆகியவற்றின் கூட்டமைப்பான ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தோழர் சிறீ சபாரத்தினம், தோழர் பத்மநாபா, தோழர் பிரபாகரன், தோழர் பாலகுமார்

### அமெரிக்க தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

ஜூலை 19, சென்னையிலுள்ள அமெரிக்க தூதரகம் முன் ஈழ மாணவர் பொது மன்றம் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. நிக்காரகுவாவின் சுதந்திர தினத்தை நினைவு கூர்ந்தும், அமெரிக்க ஏகாதிபத்தியம் நிக்காரகுவாமீது மேற்கொள்ளும் எதிர்ப் புரட்சிகர ஊடுருவல், அச்சுறுத்தல் முயற்சிகளை கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இலங்கைததீவுக்குள் புகுந்து இந்தியத் துணைக் கண்டம்மீது தனது சதி பிளவு, வேலைகளுக்கு திட்டமிடும் அமெரிக்கா இதேபோல கோன்டுராஸ் நாட்டிலுள்ள தனது ஏவல் நாய்கள் மூலம் நிக்காரகுவா மீது சதி வேலைகளை கட்ட விழ்த்து விட்டுள்ளது என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் வெளியிட்டுள்ள பிரசுரமொன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்கா அரசு முன்வைத்த தீர்வு நிராகரிக்கப்பட்டது ஈழம் தவிர்ந்த வேறெந்த தீர்வும் சாத்தியமாகாது!

சிறீலங்கா அரசின் பிரதிநிதிகளுக்கும், ஈழ மக்களின் பிரதிநிதிகளுக்குமிடையே இந்தியாவின் முன் முயற்சியால் திம்புவில பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ஈழத்தேசிய விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழமக்கள் விடுதலைக் கழகம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஈழ மக்களின் பிரதிநிதிகளாக பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனேயின் தம்பியாகிய H. W. ஜெயவர்த்தனே தலைமையில் சிறீலங்கா அரசின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இப்பேச்சுவார்த்தையில் சிறீலங்கா அரசின் பிரதநிதிகள் அரசியல் தீர்வுக்கான பிரேரணையென்று கூறி 1984ம் ஆண்டு அனைத்துகட்சி மகாநாட்டில் முன்வைதத பிரேரணையை மீண்டும் முன் வைத்தனர். ஈழமக்களின் பிரதிநிதிகள் ஒருமித்த குரலில் இப்பிரேரணையை திட்டவட்டமாக நிராகரித்தனர். ஈழவிடுதலை தவிர்ந்த வேறெந்த தீர்வும் சாத்தியமாகாது என்றும ஒரேகுரலில தெரிவித்தனர்.

சிறீலங்கா அரசின் பிரேரணை நிராகப்பட்டதால் அதன் பிரதிநிதிகள் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாணக்கூடிய பிரேரணை ஒன்றைமுன் வைக்குமாறு ஈழமக்களின் பிரதிநிதிகளை கேட்டனர். இதற்கான பதிலாக ஈழமககளின் பிரதிநிதிகள் சாாபில் **தோழர் வரதன்** பின்வரும் முடிவுகளை கூறினார்.

★ இலங்கைத் தீவில் வாழும் தமிழ்பேசும் மக்கள் தனித்துவமான தேசிய இனம். ★ தமிழ் பேசும் மக்களுக்கென இலங்கையில் அடையாளம் காணப்படககூடிய தொடர்ச்சியான, தனியான தொரு தாயகம உண்டு. இநத அடிப்படையில் ★ இலங்கைததீவில் வாழும் தமிழ்மக்களுககு சுய நிர்ணய உரிமை உண்டு ★ இலஙகைத்தீவை தமது சொந்தமெனக் கருதும் அனைவரும குடியுரிமை உட்பட அனைத்து அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் உடையவர்களாக இருத்தல வேண்டும்.

இந்த நான்கு விடயங்களையும் சிறீலங்கா அரசு அங்கீகரித்து இவற்றின் அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வை முன் வைக்கவேண்டும் என்று ஈழமக்களின் பிரதிநிதிகள் கூறினார்கள்.

இவற்றை தமது அரசாங்கத்திற்கு எடுத்துச் சென்று கூறுவதாக H. W. ஜெயவர்த்தனே கூறினார். இதனால் பேச்சுவார்த்தையை ஒத்தி வைத்து மீண்டும் ஆகஸ்ட் 12ம் திகதி வைத்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

பேச்சுவார்த்தையின் இறுதி நாளன்று **தோழர் கேதீஸ்வரன்** பேசும் போது அடுதத சுற்று பேச்சுவார்த்தை நல்ல சூழலில் நடைபெற வேண்டுமானால் சிறீலங்கா அரசாங்கம் தான் ஒப்புக்கொண்டபடி ★ கடல் கண் காணிப்பு வலயத்தை உடன் நீக்க வேண்டும். ★ ஆயுதக் குவிப்பு மற்றும் இராணுவ மயமாககல் நடவடிக்கைகள் அனைத்தையும் சிறீலங்கா அரசு நிறுத்த வேண்டும். ★ கைதுசெய்யப்பட்டோர் தொடர்பாக சிறீலங்கா அரசு தான் ஒப்புக்கொண்டபடி நடந்துகொள்ளவேண்டும். ★ ஈழமெங்கும் குறிப்பாக கிழக்கில் நடைபெறும் யுததநிறுத்த மீறல்கள் தொடர்ந்தும் நடைபெறாதபடி பாாத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

★

## ஆக்கிரமிப்பாளின் சதி முயற்சிகள்

## தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றச்சாட்டு!

பாலஸ்தீனத்திலிருந்து பாலஸ்தீனியரை முழுமையாக விரட்டி, அடித்துவிட்டு நாட்டை முழுவது மாக யூதக் குடியேற்றங்கள் மூலம் இஸ்ரேல் சியோனிஸ்டுக்கள் ஆக்கிரமித்தது போல் சிறீலங்கா அரசும யுத்த நிறுத்த சூழ்நிலையை பயன்படுத்தி தமிழர் பகுதிகளின் எல்லையோரங்களிலுள்ள தமிழர்களை விரட்டிவிட்டு அங்கு சிங்களக் குண்டர்களை குடியமர்த்தும் சதி வேலைகளில் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) வெளியிட்டுள்ள பத்திரிகைகுறிப்பு ஒன்றில் கூறபபட்டுள்ளது.

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போர்நிறுத்தம்! ஆக்கிரமிப்பாளர் ஒப்புக்கொண்ட நிபந்தனைகள்!

# இணைந்த விடுதலை அமைப்புகளின் ஒருமித்த முடிவு!

ஜூன் 24 ஈழவிடுதலைப் போராளிகளின் தீர்க்கமான தொடர்ச்சியான ஆயுதப்போராட்டத்தை எதிர்கொள்ள முடியாது ஆட்டம் கண்ட சிறீலங்கா அரசு எம்மோடு ஒரு தற்காலிக யுத்த நிறுத்த உடன்பாடு செய்துகொள்ள விரும்பி இந்திய மத்திய அரசின் உதவியை நாடியது. இது சம்பந்தமாக அண்மைக்காலத்தில் இந்திய அரசு எம்முடன் தொடர்பு கொண்டிருந்தது. இன்றைய மோசமான நிலைக்கு சிங்கள அரச பயங்கரவாத நடவடிக்கைகளே காரணமாகையால் போர் நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி அமைதியான சூழ்நிலையை உருவாக்க நாம் சில நிபந்தனைகளை சிறீலங்கா அரசுக்கு விதித்தோம். இந்த நிபந்தனைகள் வருமாறு:

1. தமிழ்மீனவருக்கு விதிக்கப்பட்ட தடைகளான கண்காணிப்புவலையம் தடை செய்யப்பட்ட பிரதேசம் ஆகியன உடனடியாக நீக்கப்படவேண்டும்.

2. பொதுமக்களுக்கு இருந்த போக்குவரத்துத் தடைகள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும்.

3. உணவு எரிபொருள் தடைகள் முற்றாக நீக்கப்படவேண்டும்.

4. ஊரடங்குச்சட்டத்தை முற்றாக நீக்குதல் வேண்டும்,

5. புதிய சிங்களக் குடியேற்றங்கள் அனைத்தும் முற்றாக நீக்கப்படவேண்டும். அத்துடன் எமது பாரம்பரிய பிரதேசங்களில் ஏற்கனவே குடியேற்றப்பட்ட சிங்களமக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

6. இராணுவ அடக்குமுறைகள்யாவும் முற்றாக நீக்கப்படவேண்டும,

7. கைதுசெய்து காவலிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளை சிறீலங்கா அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இவற்றினை அமுல்படுத்தும் வகையினைப் பொறுத்தே நாம் தற்காலிக போர்நிறுத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவோம். இந்நிபந்தனைகளை குறித்த காலத்துக்குள் நிறைவேற்றத் தவறும்பட்சத்தில் சிறீலங்காஅரசு நிபந்தனைகளை மீறிவிட்டதாக கருதிக்கொண்டு நாம் எமது போராட்ட நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துவோம் என்பதை உறுதியாகக்கூறிக்கொள்கிறோம்.

12வாரங்கள் மட்டும் நீடிக்கும் இத்தற்காலிக போர்நிறுத்த கால எல்லைக்குள் தமிழ்மக்களின் பிரச்சனைக்கு ஒரு திட்டவட்டமான அரசியல் தீர்வை முன்வைக்குமாறும் சிறீலங்காவை நாம் வேண்டியுள்ளோம். இந்திய அரசின் ஆக்கபூர்வமான நல்லெண்ண முயற்சிகளை ஏற்றுக்கொண்ட சிறீலங்கா அரசாங்கம் அதற்கு மாறான வகையில் எம்மைப் ''பயங்கரவாதிகள்'' என்றும் ''ஆயுதங்களைக் கீழே போட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்'' என்றும் பொறுப்பற்ற முறையில் திரித்துக்கூறுவது அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தாது என எச்சரிக்கிறோம். இவ்வாறு தற்காலிக போர் நிறுத்தம் சம்பந்தமாக ஈழத் தேசிய விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

✹

## தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்

தங்கள் காட்டுமிராண்டித்தனத்தை இந்திய மீனவர்களின் மீதும் காட்டும் சிறீலங்கா கடற்படை கொள்ளையரின் அடாவடிச் செயல் மீண்டும் துவங்கியுள்ளது. ராமேஸ்வரம் பகுதியிலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்ற தமிழ் மீனவர்களின் படகுகளை நொறுக்கி, பலரைக் காயப்படுத்தி, மீன்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் சிறீலங்கா கடற் கொள்ளையர்கள்.

ராமேஸ்வரம் பகுதியிலிருந்து தனுஷ்கோடி கடற்பகுதியில் இந்திய எல்லைக்குள் மீன்பிடிக்க விசைப்படகுகளில் மீனவர்கள் சென்றனர். அப்போது, பாக்கு நீரிணை கடற்பகுதியில் தான்தோன்றித்தனமாகவும் எதேச்சாதிகாரத்துடனும் நடந்து கொள்ளும் சிறீலங்கா கடற்படையினர் இந்திய மீனவர்களைத் துப்பாக்கி முனையில் மிரட்டி, துப்பாக்கிப் பின்புறங்களினால் அடித்து, அவர்கள் பிடித்து வைத்திருந்த இறால் மீன்களை பலவந்தமாகப் பறித்துச் சென்று விட்டனர், படகுகளிலிருந்த டீசல் கேன்களையும் தூக்கிச் சென்று விட்டனர். சிங்கள ராணுவம் தாக்கியதில் தமிழக மீனவர்களான பஞ்சாட்சரம், செல்வராஜ், கருப்பையா ஆகியோர் படுகாயமடைந்துள்ளார்கள்.

www.tamilarangam.net

## சீனாவிடம் பீரங்கிப்படகுகள்
## பாகிஸ்தானிடம் போர்விமானங்கள் கொள்வனவு!
## அரசியல் தீர்வுகாணும் முயற்சியா? ஆயுதக் குவிப்பு நடவடிக்கையா!
## இலங்கைத்தீவில் பதட்டத்தை பேண சர்வதேச பிற்போக்குதும்பல் தீவிரம்!

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அம்பலப்படுத்துகிறது

தற்காலிக போர் நிறுத்த காலகட்டத்தில் சிறீலங்கா அரசு தன்னை பலப்படுத்துவதிலும், ஈழ மக்கள் மீதான அழித்தொழிப்பு தாக்குதலுக்கான தயாரிப்புக்களிலும் ஈடுபட்டுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) தெரிவித்துள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு கிடைத்துள்ள நம்பகமான செய்திகளின் படி சிறீலங்கா அரசு பாகிஸ்தானுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி நான்கு போர் விமானங்களை இரண்டு வாரங்களுக்குள் பெற்றுக்கொள்ளப் போகிறது. இதைவிட அறுபது சிறீலங்கா இராணுவத்தினர் அதிரடிப்பயிற்சி பெறுவதற்காக பாகிஸ்தானுக்குசென்றுள்ளனர். நவீனரகதுப்பாக்கிகளும் சிறீலங்கா அரசு வாங்கிக் குவிக்க இருக்கிறது

சீனாவிடம் இருந்து 18 பீரங்கிப் படகுகள் வந்து சேர உள்ளன. SAS ஐச் சேர்ந்த ஜெனரல் சிமித் என்பவர் சிறீலங்காவில் உள்ள கட்டுகுருந்தை பொலிஸ் பயிற்சி நிலையத்தில் பத்தாயிரம் பேருக்கு பயிற்சி அளிக்க முன்வந்துள்ளார். ரோயல்கல்லூரி, ஆனந்தா கல்லூரி, டி . எஸ். சேனநாயக்கா கல்லூரி, மஷீராமாகல்லூரி ஆகியவற்றிலுள்ள சிங்கள மாணவர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப் படுகிறது,

சிறீலங்காவில் 18.000 தமிழர்களை வலுக்கட்டாயமாகக் குடியேற்றும் திட்டம் வகுக்கப்படுவதுடன் ஈழத்தின் எல்லைப் புறங்களில் உள்ள சிங்கள மாணவர்களுக்கு ஆயுதம வழங்க டிரேடிங் காப்பரேஷன் மூலம் 20,000 துப்பாக்கிகள் வாங்கப் பட்டுள்ளன.

சிறீலங்கா அரசு அரசியல் தீர்வு காண்பதில் கவனம் செலுத்தவில்லை, மாறாக இக்கால கட்டத்தில் இராணுவத்தீர்வு ஒன்றைகாணும் முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளது, சிறீலங்கா அரசின் இத்திடடத்துக்கு பின்பலமாக நிற்பதன் மூலம் சர்வதேச பிற்போக்குவாத நாசகார சக்திகள் இலங்கைத்தீவில் பதட்டத்தை பேணவும், தமது ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கான உந்துதளமாக இலங்கைத்தீவை மாற்றவும் முயன்றுவருகின்றன.

## வெல்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்!

PRINTED MATTER

EPIC

Post Bag: 5551
MADRAS 600 094

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செய்தி தொடர்பு நிறுவனமான
ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு

EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

LONDON BRANCH: EPIC B. M. Box 1738, LONDON WC1 3XXN

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்